**வாக்குமூலம்**

**16–வது கூடுதல் அமர்வு நீதிமன்றம், மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை**

அமர்வு வழக்கு எண்: 82/2022

வழக்கு சாட்சி: அ.சா.8

| | |
|---|---|
| பெயர் : டாக்டர்.ஜிதேந்திரசிங், MBBS | முகவரி/கிராமம் : கதவு எண். |
| தகப்பனார் பெயர் : | |
| வயது : | |
| தொழில் : | தாலுக்கா : |

1வது எதிரி ஆஜர். 2,3 எதிரிகளுக்காக மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provision of Act 1873 on the 4th day of March 2025:

சாட்சியின் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது.

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது**

நான் தற்போது அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவமனை மற்றும் மருத்துவ கல்லூரியில் உடலுரியியல் துறையில் பட்ட மேற்படிப்பு பயின்று வருகிறேன். கடந்த 18.05.2021 ஆம் தேதியன்று இரவு 11.00 மணியளவில் அதே மருத்துவமனையில் அவசர சிகிச்சை மருத்துவராக பணியிலிருந்தபோது 2–ஆம் நிலை காவலர் திரு. ராஜ் குமார் என்பவர் எப்–3, நுங்கம் பாக்கம் காவல்நிலையத்தில் சம்பந்தப்பட்ட அப்ரோஸ் பிமானி என்பவரை சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை விசாரித்தபோது காயம்பட்ட நபர் தன்னை அடையாளம் தெரிந்த இரண்டு ஆண் நபர்கள் இரும்பு ராடு மூலம் வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் ஓட்டல் பிஸ்மி அருகில் 18.05.2021 ஆம் தேதியன்று இரவு 8.00 மணிக்கு தாக்கியதாக சொன்னார். அவரை நான் பரிசோதித்தபோது அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் இருந்தன.

1. இடது மணிக்கட்டில் 2x5 செமீ அளவில் சிராய்ப்பு காயம் இருந்தது.

2. அதைச்சுற்றி இடது மணிக்கட்டில் வீக்கம் காணப்பட்டது.

அவரை உள்நோயாளியாக பாவித்து அறுவை சிகிச்சை நிபுணர் மற்றும் எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர் ஆகியோருக்கு பரிந்துரைத்தேன். நுண்கதிர் படம் எடுக்கவும் பரிந்துரைக்கப்பட்டது. 12.06.2021 ஆம் தேதியன்று மேற்படி நிபுணர்கள் வழங்கிய மருத்துவ அறிக்கைகளின் அடிப்படையில் நோயாளிக்கு இடதுகை மணிக்கட்டில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது என்பது தெரியவந்ததால் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று நான் சான்று வழங்கினேன். நான் வழங்கிய விபத்து பதிவேடு **அ.சா.ஆ.8**. காயம் குறித்த எனது கருத்துரு **அ.சா.ஆ.9.** என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

1 வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை –

18.05.2021 ஆம் தேதியன்று காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். அதற்கு பிறகு காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தாரா என்றால் – அது எனக்கு ஞாபகமில்லை. கிடைக்கப்பெற்ற ஆவணங்களின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று எனது இறுதி கருத்துருவில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அந்த ஆவணங்கள் என்னென்னவென்று அதில் சொல்லப்படவில்லை என்று சொன்னால் – சரிதான். மணிக்கட்டில் உள்ள எலும்புகள் எத்தனை என்றால்– வயதுக்கேற்றபடி எண்ணிக்கை இருக்கும். வயது முதிர்ந்தவர்களுக்கு 8 கார்பல் எலும்புகள் இருக்கும். மற்ற எலும்புகளுடன் அந்த எலும்புகள் இணைந்திருக்காது என்றால் – சரிதான். இரவு 11 மணிக்கு தான் காயம்பட்டவர் சிகிச்சைக்கு கொண்டுவரப்பட்டார். நுண்கதிர்படம் என்னால் தான் பரிந்துரைக்கப்பட்டு பெறப்பட்டது. நுண்கதிர் படத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. நுண்கதிர் படம் எடுக்கப்பட்டது தொடர்பான நிபுணரின் அறிக்கை என்னிடம் இல்லை. எலும்பு முறிவு இருந்ததால் கொடுங்காயம் என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். எந்த எலும்பு முறிந்திருந்தது என்றால் – அதற்குரிய ஆவணத்தை பார்த்து தான் சொல்லமுடியும். அன்றையதினமே உள்நோயாளியாக மேற்படி காயம்பட்ட நபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவில்லை என்றாலும், என்னிடம் சிகிச்சை பெற்ற பிறகு அவர் மருத்துவமனையிலிருந்து வெளியேறிவிட்டார் என்றால் – அது பற்றி எனக்கு தெரியாது. சரியான ஆவணங்களின் அடிப்படையில் நான் மேற்படி காயச்சான்றை வழங்கியிருக்கவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க துரித

கதியில்  செயல்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டதாக முடிவு செய்து கொடுங்காயம் என்று தவறாக சான்று வழங்கியிருக்கிறேன் என்று சொன்னால் – அது சரியல்ல. வேகமாக ஒரு நபர் இடது கை மணிக்கட்டை வைத்து கடினமான சுவர் மற்றும் காரில் மோத நேரிட்டால் மேற்சொன்னவருக்கு ஏற்பட்டது போன்ற காயம் ஏற்பட வாய்ப்புள்ளதாக என்றால் – அதற்கு வாய்ப்பில்லை. கடினமான பொருள் இவர் மீது மணிக்கட்டில் தாக்கினாலோ அல்லது இவரே மணிக்கட்டில் தாக்கிக் கொண்டாலோ மேற்சொன்னது போன்ற காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. கார் கண்ணாடி மீது அதை உடைப்பதற்காக கையால் அடிக்கிற போது மேற்சொன்ன நபருக்கு ஏற்பட்டது போன்ற சிராய்ப்பு காயமும் வீக்கமும் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் – அதற்கு வாய்ப்பில்லை. ஒரு நோயாளி உள்நோயாளியாக அனுமதிக்கப்படுகிறபோது அவருக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர்தான் நோயாளிக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து சான்று வழங்க முடியும் என்றாலும் ,அவ்வாறு உள்நோயாளியாக காயம்பட்டவர் சிகிச்சை பெறவில்லை என்பதால்தான் என்னை வைத்து போலீசார் காயச்சான்று வாங்கியிருக்கிறார்கள் என்றாலும் – அது சரியல்ல.

2,3 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை –

காயம் குறித்த அபிப்ராயம் வழங்கியுள்ளதில் எந்தெந்த இடங்களில் எந்த மாதிரியான காயம் என்று கருத்துரையில் குறிப்பிடவில்லை என்றால் – சரிதான். விபத்து பதிவேடு பதிவு செய்த பிறகு உள்நோயாளியாக சிகிச்சை பெறுவதற்கு நோயாளியை அனுப்பி விட்டால் மருத்து ஆவணங்கள் எனக்கு திரும்ப வராது என்றால் – சரிதான். எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை மேற்படி அப்ரோஸ் பிமானி என்பவர் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றார்  என்று காயச்சான்றில் குறிப்பிடவில்லை என்றால் – சரிதான். எந்தெந்த நபர்கள் நோயாளிக்கு சிகிச்சை வழங்கினார்கள் என்பது குறித்து குறிப்பிடப்படவில்லை எ்ன்றால் – சரிதான். எனவே, விபத்து பதிவேடு மட்டுமே பதிவு செய்த நான் இதர ஆவணங்கள் எதையும் நான் பார்க்காமலே நோயாளிக்கு ஏற்பட்டது கொடுங்காயம் என்று தவறாக காயச்சான்று வழங்கியிருக்கிறேன் என்று சொன்னால் – அது சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.